CHIEF CONSERVATOR OF FORESTS
NOV 2020
CHENNAI-600 015

வாய்மையே வெல்லும்

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - வனத்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற வனக்காப்பாளர் (திரு).டி.ப்பி.பழனிவேலு என்பவரின் மகன் திரு.ப.வடிவேல் என்பவருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர் பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் – வனத்(வனம். 9)துறை**

அரசாணை (டி) எண் : 157

நாள் : 11.11.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, ஐப்பசி – 26

படிக்கப்பட்டவை :

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண்.எம்.2/20475/2017, நாள். 29.06.2019, 26.09.2019, 05.11.2019 மற்றும் 14.09.2020.

---

**ஆணை:**

வனத்துறையில், திருவண்ணாமலை கோட்டம், தானிப்பாடி சரகத்தில் வனக்காப்பாளராகப் பணிபுரிந்த போது 05.03.1996 அன்று பணியிடை மரணமடைந்த (திரு). டி.ப்பி.பழனிவேலு என்பவரின் மகன் திரு.ப.வடிவேல் என்பவர் கருணை அடிப்படையில் பணி கோரி அளித்த விண்ணப்பம், பணியாளர் இறந்து, மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்படாமல், காலங்கடந்து அளிக்கப்பட்டதால், சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 17566/2007 நாள் 20.06.2011–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, தனியர் பொருட்டு அரசு ஆணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.26.06.1995–க்கு விலக்களித்து, அரசு ஆணை (3டி) எண்.54, சுற்றுச்சூழல்–வனத்துறை, நாள்.26.07.2013–ல், தனியருக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்க, முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இதனடிப்படையில், தனியருக்கு, கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டு, அவர் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 06.11.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும் தனியரின் தற்காலிகப் பணியினை அவர் பணியேற்ற நாளான 06.11.2017 முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அரசைக் கோரியுள்ளார்.

2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவை அரசு உரிய ஆவணங்களுடன் கவனமாகப் பரிசீலனை செய்தது. காலஞ்சென்ற வனக்காப்பாளர் (திரு).டி.ப்பி.பழனிவேலு என்பவர் மகன் திரு.ப.வடிவேல் என்பவர், விண்ணப்ப நாளில், கருணை அடிப்படையில் இளநிலை

...2...

உதவியாளர் பணி நியமனத்திற்கான வயது மற்றும் கல்வித் தகுதிகளைப் பெறாததால், அவர் பொருட்டு அரசு ஆணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–க்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58–ல் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்காண் சட்டம், பிரிவு 20(6)(b)–ஐ தனியர் பொருட்டு தளர்வு செய்தும், நியமன நாளிலிருந்து அவருக்கு முன் தேதியிட்டு ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர பணப்பலன்கள் நிலுவையில் இருந்தால், அதனை வழங்கும் பொருட்டு, மேற்காண் சட்டப்பிரிவு 28(2)–ஐ தளர்வு செய்தும், அவருக்கு, கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர் பணியை, அவர் பணியில் சேர்ந்த நாளான 6.11.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியரின் ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தனியர் தகுதியுடைவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அ.சா.எண்.24918/க்யூ.1/2019–1, நாள் 11.03.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அ.சா.எண்.9430/ஜி2/2020, நாள் 20.03.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(துறைத் தலைவர்),
சென்னை-15.
திரு.ப.வடிவேல்,
இளநிலை உதவியாளர்,
(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் வழியாக).

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்